கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.118/2019**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 22.04.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 22.04.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | வயது | 43 |
| தந்தை பெயர் | ராமுபிள்ளை | கிராமம் | ரிஷிவந்தியம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் BSc, LLB., வரை படித்துள்ளேன். LLB., முடித்து பார் கவுன்சிலிங் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிறந்த தேதி 17.07.1981. தெய்வானை அம்மாளும் அவரது கணவர் குப்புசாமியும் எங்கு வசித்து வந்தார்கள் என்றால் ரிஷிவந்தியில் அமைந்துள்ள எனது தந்தையார் வீட்டில் தான் வசித்து வந்தார்கள். அவர்கள் எனது தந்தை ராமுபிள்ளையுடன் வசித்திதற்கான குடும்ப அட்டை உள்ளதா என்றால் அவர்கள் 1993 வரை எங்களுடன் இருந்தார்கள் அப்பொழுது இருந்தது. 1993 வரை இருந்த குடும்ப அட்டை தற்போது தொலைந்து விட்டது தெய்வானை அம்மாளும் குப்புசாமியும் எனது தந்தையுடன் வசிக்கவில்லை என்றாலும் அதற்குண்டான குடும்ப அட்டையும் தொலைந்து விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. தெய்வானை அம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு மகள் மற்றும் நான்கு மகன்கள் அவர்கள் முறையே ராஜகோபால், ராமச்சந்திரன், ரங்கநாதன், மகாலட்சுமி மற்றும் ராமுபிள்ளை. எனக்கு தந்தையான இராமப்பிள்ளை தெய்வானை அம்மாளுக்கு எத்தனாவது மகன் என்றால் கடைசி பிள்ளை ஆவார். எனது தந்தை அவரது பெற்றோர்களுடன் ஒத்தாசையாக இருந்ததற்கும் அவர்களுக்கு பாத்தியமான வழக்கு சொத்தில் பயிர் செய்ததற்கான ஆவண சாட்சியம் உள்ளதா என்றால் எனது தந்தை பெயரில் இல்லை ஆனால் எனது பாட்டி தெய்வானை

பெயரில் உள்ளது. அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்து உள்ளேன். எனது பெரியப்பா ஆன ராமச்சந்திரனுக்கும் ரிஷிவந்தியில் தனியாக வீடு உள்ளது என்றால் சரிதான்.

3. எனது பெரியப்பா இராமச்சந்திரன் உடன் எனது பாட்டி மற்றும் தாத்தா வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தா பாட்டி எனது பெரியப்பா ஆன ராமச்சந்திரன் உடன் தான் வசித்து வந்தார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தகப்பனார் தான் தெய்வானை அம்மாளும் அம்மாவையும் குப்புசாமியும் தன் குடும்பத்தில் வைத்துக்கொண்டு சவரசனை செய்து வந்து அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ததாக தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு உண்டான கிரிய ஆவணங்களை தெய்வானை அம்மாள் எனது தந்தையிடம் ஒப்படைத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் அவ்வாறு ஒப்படைக்கும் பொழுது யாருடன் இருந்தார்கள் என்றால் எனது அத்தையான மகாலட்சுமி உடன் இருந்தார். எனது அத்தை தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

4. எனது தந்தையிடம் தெய்வானை அம்மாள் வழக்கு சொத்துக்கு உண்டான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றாலும் அப்பொழுது எனது அத்தை உடன் இருந்ததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தையிடம் ஒப்படைத்ததாக சொல்லப்படும் கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையிடம் எந்த ஆண்டு கிரய ஆவணம் ஒப்படைத்தார் என்றால் 1990. குப்புசாமி 1989 ஆம் ஆண்டில் இறந்தார் என்றாலும் தெய்வானை அம்மாள் 1993 இறந்தார் என்றாலும் சரிதான். அவர்கள் இறந்த பிறகு வழக்கு சொத்து எனது தந்தை ஆண்டு அனுபவித்ததாக கூறிய நிலையில் அதற்கு உண்டான ஆவணங்கள் எனது தந்தை பெயரில் உள்ளதா என்றால் இல்லை எனது பாட்டியின் பெயரில்தான் உள்ளது.

5. எனது தந்தை 1999 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு நான் வழக்கு சொத்தை அடைந்து அனுபவித்ததற்கான ஆவண சாட்சியங்கள் எதுவும் என் பெயரில் இல்லை என்றால் சரிதான். தெய்வானை அம்மாளோ அவரது இதர வாரிசுகளோ எனது தகப்பனார் வழக்கு சொத்தை அனுபவிப்பதற்கு எழுத்துப்பூர்வமாக ஆவணங்கள் எதுவும் எழுதி தரவில்லை என்றால் சரிதான்

வாய்மொழியாக உரிமை கொடுத்தார்கள்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram